www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## முதலாம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 1st Term Examination - 2023

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| கர்நாடக சங்கீதம் Music | Three Hours / Gr -12 (2024) | 55 | T | I,II |

### பகுதி - I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. ஆபோகி இராகத்தின் தாய் ராகம்
    1) கல்யாணி 2) சங்கராபரணம் 3) ஹரஹரப்பிரியா
    4) ஹரிகாம்போதி 5) தோடி

02. நவராகமாலிகா வர்ணத்தின் முதலாவது சரணஸ்வரம் அமைந்துள்ள இராகம் யாது?
    1) பேகட 2) காம்போதி 3) யதுகுலகாம்போதி
    4) பிலஹரி 5) மோகனம்

03. திரி அன்னிய ஸ்வர பாஷாங்க இராகம்
    1) அடாணா 2) முகாரி 3) பைரவி 4) ஹிந்துஸ்தான் காபி 5) காம்போதி

04. சாரங்கா இராகத்தில் வரும் அன்னியஸ்வரம்
    1) சாதாரண காந்தாரம் 2) கைகசி நிஷாதம் 3) சுத்த மத்திமம்
    4) சதுஸ்ருதி தைவதம் 5) சுத்த தைவதம்

05. ஸ்வராந்தர இராகங்களுள் ஒன்று
    1) ஜகன் மோகினி 2) ஸாவேரி 3) சாரமதி
    4) நவரச கன்னட 5) நவரோஜ்

06. இராக தாள மாலிகையாக அமைந்த சூளாதியை இயற்றியவர்.
    1) புரந்தரதாஸர் 2) கலாநிதி. கே. பொன்னையாபிள்ளை
    3) தியாகராஜர் 4) திருப்பதி அன்னமாச்சாரியார்
    5) கோவிந்தாச் சாரியார்

07. திசி - ஸ்ரீ ராகமானது.
    1) சித்ராம்பரி 2) நடனபைரவி 3) சுபபந்துவராளி
    4) ஷண்முகப்பிரியா 5) திவ்யமணி

08. தபேலா வாத்தியத்தை உருவாக்கியவர்.
    1) சேவுக பாண்டிய தேவர் 2) ஹரிசங்கர் 3) அமிர்குஸ்ரு
    4) பாத்கண்டே 5) தான்சேன்

09. இசைக்கருவிகளை வாசிக்கும் போது ஐந்து விரல்களையும் பயன்படுத்தும் முறைமையை அறிமுகப்படுத்தியவர்.
    1) பாக் 2) அமிர்குஸ்ரு 3) அபூஅல் - ஹசன்
    4) உத்தீன் கில்ஜீ 5) மொசாட்



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

10. மகாத்மா காந்தியின் பிறந்த நாளுக்காக "ஹரிதும் ஹரோ" என்ற பஜனையைப் பாடியவர்.
    1) அமிர்குஸ்ரு  2) எம். எஸ் சுப்புலட்சுமி  3) பாலசரஸ்வதி
    4) ஹரிசங்கர்  5) வீரமணி ஐயர்

11. பறாளை விநாயகர் பள்ளு முதலிய பிரபந்தங்கள் இயற்றப்பட்ட நூற்றாண்டு
    1) 13ம் நூற்றாண்டு  2) 15ம் நூற்றாண்டு  3) 16ம் நூற்றாண்டு
    4) 14ம் நூற்றாண்டு  5) 17ம் நூற்றாண்டு

12. இணுவில் சின்னத்தம்பி புலவரால் இணுவில் கைலாயநாதன் மீது பாடப்பட்ட பாடல்
    1) புரான படனம்  2) மருதப்பகுறவஞ்சி  3) பஞ்சவண்ணத்தூது
    4) ஞானப்பள்ளு  5) குறவஞ்சி

13. 34 ஆண்டுகள் வாழ்ந்தாலும் 500 இசை உருப்படிகளை இயற்றிய பெருமைக்குரியவர்.
    1) தியாகராஜ சுவாமிகள்  2) செம்மங்குடி ஸ்ரீநிவாச ஐயங்கார்
    3) அமிர்குஸ்ரு  4) ஸ்வாதித்திருநாள் மகாராஜா
    5) மொசாட்

14. இலங்கைத் தமிழருக்குரிய சிறந்த வாத்தியமாக விளங்கும் வாத்தியம்.
    1) வயலின்  2) நாதஸ்வரம்  3) தவில்
    4) உடுக்கை  5) கெஞ்சிரா

15. நாட்டுக் கூத்தினைக் குறுகிய நேரத்தில் மேடையேற்றும் வகையில் நவீனமயமாக்கியவர்.
    1) பேராசிரியர் சி. மௌனகுரு  2) பேராசிரியர் சு. வித்தியானந்தன்
    3) இணுவில் சின்னத்தம்பி புலவர்  4) கணபதி ஐயர்
    5) வீரமணி ஐயர்

16. இயக்கர், நாகர் கையாண்ட வாத்தியக் கருவி "நாகசின்னம்" என அழைக்கப்பட்டது. என்று கூறும் நூல்
    1) மகாவம்சம்  2) இராமாயணம்  3) யாழ்நூல்
    4) சங்கீதசாராம்ருதம்  5) சங்கீத சுதாகரம்

17. பாஹிமாம் ஸ்ரீ எனும் சௌக்க காலக் கிருதியை இயற்றியவர்.
    1) டாக்டர். பாலமுரளி கிறிஸ்ணா  2) மஹா வைத்யநாதய்யர்  3) முத்துஸ்வாமி தீட்சிதர்
    4) தரங்கம் பாடி பஞ்சநாத ஐயர்  5) கோபால கிருஷ்ண பாரதியார்

18. திரிஸ்ருதி தைவதம் வரும் இராகம்
    1) ஷண்முகப்பிரியா  2) வசந்தா  3) ஜகன் மோகினி
    4) ஸாரமதி  5) பெஷராக்

19. சஞ்சாரத்தில் அன்னிய ஸ்வரம் ஒலிக்கும் பாஷாங்க இராகம்.
    1) கமாஸ்  2) பிலஹரி  3) சாரங்கா
    4) காம்போதி  5) மத்தியமாவதி

20. திவிஸ்வர வக்ர ராகம்
    1) அஸாவேரி  2) கர்நாடக பெஹாக்  3) கமாஸ்
    4) ஸ்ரீ ராகம்  5) நாட்டை

(20 x 1= 20 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி II

❖ **"அ" பகுதியில் எல்லா வினாக்களுக்கும் "ஆ" பகுதியில் இருந்து ஒரு வினாவிற்கும் "இ" பகுதியில் இருந்து இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

01. 1) பைரவி இராகத்தில் வரும் அன்னிய ஸ்வரம் யாது?
    2) நாடோடி இசைக்கும் கர்நாடக இசைக்கும் பயன்படுத்தும் சுருதி நிர்ணயிக்கப்பட்ட தாளவாத்தியம் எது?
    3) நடனபைரவி இராகத்தின் நேர்ப்பிரதி மத்திம இராகம் எது?
    4) ஒரே பொருளில் வெவ்வேறு முத்திரைகளை வைத்துப் பாடுதல் எவ்வாறு அழைக்கப்படும்.
    5) சிக்கலான இந்தியப் பாடல்களை எளிமையாக்கி மாணவர்களும் கற்றுக் கொள்ளவழி சமைத்தவர் யார்?
    6) ஸ்வாரஷ்ர அணிகள் நிறைந்துள்ள வர்ணங்களை இயற்றியவர்.
    7) கூட்டிசைகளை ஆக்கும் திறமை பெற்றவர்.
    8) பிலிப்பைன்ஸ் நாட்டின் உயர்ந்த விருதான "மக்சாய்" விருது பெற்றவர் யார்?
    9) இராம நாடக கீர்த்தனைகளை இயற்றியவர்?
    10) தமிழில் சிலப்பதிகாரத்தைப் போல், இசையில் விழங்கும் பெருநூல் ஒன்று

(10 x 2 = 20 புள்ளிகள்)

### "ஆ"- பகுதி

02. 1) ஜன்னிய இராகப் பிரிவுகளுள் நான்கினைக் குறிப்பிடுக.
    2) இவற்றுள் மூன்றினை உதாரணத்துடன் விளக்குக.

(20 புள்ளிகள்)

03. 1) ஒவ்வொரு தாளத்தின் முடிவிலும் இயற்றியவரின் பெயர் அல்லது தெய்வத்தின் பெயர் முத்திரையாக இடம்பெறும் உருப்படி யாது?
    2) அவ்வுருப்படியின் இலட்சணத்தையும், இயற்றியவர் இருவர் பெயர்களையும், உதாரணத்துடன் தருக.

(20 புள்ளிகள்)

### "இ" - பகுதி

04. பின்வரும் இராகங்களுள் ஒன்றிற்கு விரிவான லட்சணம் தருக.
    1) திரிஸ்ருதி தைவதத்தை எடுத்துக் கொள்ளும், ஹாஸ்ய ரஸத்திற்குரிய இராகம்
    2) திசி - ஸ்ரீ இராகம்

(20 புள்ளிகள்)

05. 1) இசைக்கச்சேகரிகளில் சுருதி சேர்ப்பதற்கு வசதியற்றதும் துணைத்தோல் வாத்தியமாகவும் விளங்கும் தாளக் கருவி யாது?
    2) இவ்வாத்தியத்தினை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.
    3) இதன் அமைப்பு, வாசிக்கும் முறையினை விபரிக்குக.
    4) இவ் வாத்தியம் வாசித்துப் பிரபல்யமடைந்தோர் இருவர் பெயர் தருக.

(20 புள்ளிகள்)

06. ஸ்வாதித் திருநாள் மகாராஜவின் வாழ்க்கை வரலாற்றினையும் இசைத்தொண்டினையும் எழுதுக.

அல்லது

இலங்கையில் கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி, பற்றி விபரிக்குக.

(20 புள்ளிகள்)



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!